STATEMENT OF DEFACTO COMPLAINANT

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : தேவி | Father/Husband Name : பால்பாண்டியன் |
| Age : 26 | Village : போத்திரெட்டிபட்டி |
| Taluk : | Calling : இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13 May 2026 11:30

**நிகழ்நிலை புகார்தாரரின் வாக்குமூலம் :**

1. 19.01.2026ம் தேதி நான் என்னுடைய பெற்றோர்களை பார்க்க போத்திரெட்டிபட்டியில் உள்ள அவர்களுடைய வீட்டிற்கு இரவு சுமார் 06.45 மணியளவில் சென்றேன். என்னுடைய பெற்றோர்கள் சோகத்தில் இருந்தார்கள். அவர்களிடம் என்ன என்று கேட்டபோது நான் 8 ஆண்டுகளுக்கு முன்பு வேறு சமுதாயத்தை சார்ந்த நபரை திருமணம் செய்துகொண்டதை இன்று வரை தண்ணீர் பிடிக்கும் சண்டையில் கற்பகவல்லி என்பவர் கூறுவதாக என்னுடைய பெற்றோர் கூறினார்கள். அதனால் அவரிடம் அதுபற்றி கேட்பதற்கு நான் கற்பகவல்லியின் வீட்டிற்கு சென்று வீட்டிற்கு வெளியே நின்று கற்பகவல்லியிடம் கேட்டேன். அப்பொழுது அங்கு வந்த காளியம்மாள், பரமசிவம், அவருடைய மகன் கார்த்திக் ஆகியோர் அங்கு வந்து என்னை அடித்தார்கள். கார்த்திக் என்னுடைய ஆடைகளை கிழித்து என்னை மானபங்கம் படுத்தினார்.

2. என்னை ஊருக்குள் போகக்கூடாது என்று கூறினார். என்னுடைய கணவரின் சமுதாயத்தை பற்றி மிகவும் தரக்குறைவாக அந்த மூன்று நபர்களும் பேசினார்கள். எனக்கு சம்பவத்தில் ஏற்பட்ட காயத்திற்கு சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். வழக்கு சம்பவம் தொடர்பாக நான் இருக்கன்குடி காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். ஆகையால், எதிரிகள் மூன்று பேர் மீதும் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். வழக்கு சம்பவத்தின் போது எதிரிகள் மூன்று பேரும் என்னுடைய பெற்றோர்களையும் அடித்தார்கள். அதில் அவர்களுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. ஆனால், என்னுடைய அம்மா இன்றுவரை ஊசி போட்டுக்கொண்டிருக்கிறார்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

(Sd/-S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur

// True Copy //P.P